
## திராவிடத்தால் வாழ்கிறோம்

952

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

126

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **பாபு ஜனார்த்தனம்** அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# பாபு ஜனார்த்தனம்; ‘அமைதியின் உருவமும், அரிமா நெஞ்சமும்!’



1965-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், இந்தித் திணிப்புக்கு எதிராக கழகம் அறிவித்த போராட்டம், உணர்வுக் கொந்தளிப்பாக தமிழ்நாடு முழுவதும் பற்றி எரிந்து கொண்டிருந்த நாட்களில், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர் ராசேந்திரன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். போராட்டம் மேலும் பரவாமல் தடுக்க பேரறிஞர் அண்ணா, நாவலர், பேராசிரியர் உள்ளிட்ட கழக முன்னோடிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட கழக முன்னோடிகள் அனைவரையும் சமூக விரோதிகள், ரவுடிகள் என்று பொருள்படும்படி போலீசார் அறிக்கை வெளியிட்டனர். அந்த அறிக்கையில், அன்றைய வடஆற்காடு மாவட்டப் பட்டியலில் ப.உ.சண்முகம், புலவர் கோவிந்தன், மா.பா.சாரதி உள்ளிட்டோருடன் ‘சமூக விரோதிகள்’ என்று அடையாளம் காட்டப்பட்ட கழக முன்னோடி பாபு ஜனார்த்தனம். நீதிக்கட்சிக் குடும்பத்தில் இருந்து, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என கொள்கை வாரிசாக வந்த, செய்யாறு வட்டக் கழகத்தின் தளகர்த்தர்.

### நீதிக்கட்சிக் குடும்பம்

அன்றைய ஒருங்கிணைந்த வடஆற்காடு மாவட்டம், இன்றைய திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் பிறந்தவர். பெற்றோர் துரைசாமி - ராஜம்மாள். துரைசாமி அவர்களின் தந்தை ஆதிகேசவன் அவர்கள், நீதிக்கட்சியைச் சேர்ந்தவர். பார்ப்பன எதிர்ப்பில் தீவிரமாக இயங்கியவர். பார்ப்பன சடங்குகளை மறுத்தவர். செய்யாறில் அவருக்குச் சொந்தமான நாடக அரங்கத்தில், அண்ணா பல நாடகங்களை நடத்தி இருக்கிறார். துரைசாமி அவர்களும் 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில், செய்யாறில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பங்கெடுத்துள்ளார். அவர்களது வழியில், பாபு ஜனார்த்தனம் அவர்களும், திராவிடச் சிந்தனைகளில் தீவிரமாகப் பற்று கொள்ளத் தொடங்கினார்.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே திராவிடர் கழக கொடி பிடித்து வீதிகளில் முழங்கியவர். உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, அரசியல் காழ்ப்பு காரணமாக பள்ளியை விட்டு நீக்கப்பட்டதால், இளம் வயதிலேயே முழு நேரமாக அரசியல் பணிகளில் இறங்கினார்.

காஞ்சிபுரம், செய்யாறு, வந்தவாசி பகுதிகளில் திராவிடர் கழக தோழர்களுடன் இணைந்து செயல்பட்டு வந்தவர், கழகம் தொடங்கியதும் பேரறிஞர் அண்ணாவுடன் பயணப்படலானார். செய்யாறில் கழக முன்னோடி புலவர் கோவிந்தன் அவர்கள், இவரது அரசியல் ஆசிரியராக இருந்து வழிநடத்தி இருக்கிறார்.

### மாவட்டக் கழகம் தீர்மானம்

தலைமைக் கழகம் தொடங்கப்பட்டபோது, மாவட்டக் கழகங்கள் தொடங்க, ஒவ்வொரு ஊரிலும் திராவிடர் கழக மாவட்டக் கமிட்டி கூடி, அங்கிருந்து வெளியேறியவர்கள் தி.மு.கழகத்தில் இணைவதற்கு தீர்மானங்கள் நிறைவேற்றினர். ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்டத்துக்கான கூட்டம், பாபு ஜனார்த்தனம் இல்லத்தில்தான் கூடியுள்ளது. இந்தத் தகவலை, தலைமைக் கழகத்தின் முதல் பொதுக்குழு உறுப்பினரான ஏ.எல்.சி.கிருஷ்ணசாமி அவர்கள் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

மும்முனைப் போராட்டம், திருச்சி தேர்தல் சிறப்பு மாநாடு, தூத்துக்குடி மாநாடு, திருவண்ணாமலை இடைத்தேர்தல் என கழகத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் குடும்பத்துடன் பங்கேற்றவர். செய்யாறு தொகுதியை கழகத்தின் கோட்டையாக மாற்றியவர்களில் ஒருவராக இருந்தார். “குடும்பத்துக்கு சொந்தமான திரையரங்க வருமானத்தை, கழகப் பணிகளுக்கு செலவிடுவதும், கழக நிகழ்ச்சிகளுக்கு திரையரங்கினைப் பயன்படுத்துவதும் இயல்பாக இருந்தது. எங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் அந்த விஷயத்தில் மாற்றுக் கருத்து இருந்ததில்லை” என்கிறார் அவரது அண்ணன் மகனும், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் துணை அமைப்பாளருமான வழக்கறிஞர் இந்திரஜித் என்கிற சின்னதுரை.

> கலைஞர், “கழகப் பொருளாளர் சாதிக் பாட்சாவை போல, சாதுவானவர் பாபு ஜனார்த்தனம்” எனப் புகழாரம் செய்துள்ளார்.

### சட்டமன்றப் பணி

கழகப் பணியில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பணியாற்றிய அவருக்கு , 1980-ஆம் ஆண்டில் செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்தார் கலைஞர். “தனக்குப் பதிலாக ஜனார்த்தனம் போட்டியிடட்டும்” என கலைஞரிடம் கோரிக்கை வைத்து, அந்த வாய்ப்பினைப் பெற்றுத் தந்தார் புலவர் கோவிந்தன். அவரது நம்பிக்கையும், ஜனார்த்தனம் அவர்களின் கழக விசுவாசமும் மக்கள் பணியும் பாபு ஜனார்த்தனம் அவர்களை செய்யாறு சட்டமன்ற உறுப்பினராகப் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தது.

ஒருங்கிணைந்த செய்யாறு வட்டக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த அவரை, 1978-ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகக் கொண்டு வந்தார் கலைஞர். கழகத்தின் முன்னோடியான ப.உ.சண்முகம் அவர்கள் எதிரணிக்குச் சென்ற நிலையில், பரந்து விரிந்த மிகப் பெரிய மாவட்டக் கழகத்தை, 1983-ஆம் ஆண்டு வரை பொறுப்புடன் வழிநடத்தியவர்.

பாபு ஜனார்த்தனம் அவர்களின் இல்ல விழாவில் கலந்துகொண்ட கலைஞர், “கழகப் பொருளாளர் சாதிக் பாட்சாவைப் போல, சாதுவானவர் பாபு ஜனார்த்தனம்” எனப் புகழாரம் செய்துள்ளார். “சாதுவானவர் மட்டுமல்ல; எளிமையானவர். ஆடம்பரம் இல்லாதவர். தலைவரை சந்திக்க சென்னை வரவேண்டுமெனில் காரில் வர வாய்ப்பிருந்தும், பொதுப் பேருந்தில்தான் பயணிப்பார். அந்த அளவுக்கு மக்களிடம் நெருங்கி இருந்தவர். கழகத்தின் மீதும், தலைமை மீதும் பெரும் பிடிப்பு கொண்டவர்” எனக் குறிப்பிடுகின்றனர், இன்றைய திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினர். உள்ளூரிலும் அவரது வாகனம் சைக்கிள் ரிக்‌ஷாதான். கழகப் பணிகள், கட்சியினர் இல்லங்களுக்குச் செல்வது, அலுவல் பணிகள் என அனைத்துக்கும் சைக்கிள் ரிக்‌ஷா பயணம்தான் என்கின்றனர்.

### அஞ்சாநெஞ்சன் இதழ்

கழக முன்னோடிகள் பலரையும் போல, பத்திரிகை நடத்தி இருக்கிறார். அவர் நடத்திய இதழின் பெயர் ‘அஞ்சா நெஞ்சன்’ என்பதாகும். பத்திரிகையின் பெயரே அவரது கொள்கைப் பற்றுக்குச் சான்றாக விளங்கும் எனத் தகவலைப் பகிர்ந்து கொள்கிறார் திருவண்ணமலை மாவட்டக் கழக துணைச் செயலாளர் சாவல்பூண்டி சுந்தரேசன்.

1989-ஆம் ஆண்டில் கழகம் மூன்றாவது முறையாக ஆட்சியில் அமர்ந்த சில மாதங்களில், நாடாளுமன்றத் தேர்தல் பணி. நவம்பர் மாதம் முழுவதும் பிரச்சாரப் பயணத்தில் இருந்தார் கலைஞர். அவருக்கு முன்பிருந்தே கழகத்தினர் சூறாவளியாகச் சுற்றிவந்து கொண்டிருந்தனர். அப்படியான நாட்களில், நவம்பர் மாதம் 14-ஆம் தேதி எதிர்பாராத விதமாக, திடீர் இழப்பாக பாபு ஜனார்த்தனம் அவர்கள் இயற்கை எய்தினார். தலைமைக் கழகத்தில் இருந்தும் மாவட்டக் கழகத்தினரும் திரண்டு வந்து அவருக்கு இறுதிவிடை அளித்தனர். ‘மாவட்டக் கழகத்தின் செயலாளராக அரும்பணியாற்றிய - அமைதியின் உருவமும், அரிமா நெஞ்சமும் படைத்த பாபு ஜனார்த்தனம் அவர்களை இழந்தது, கழகத்துக்கு பேரிழப்பு’ என கலைஞரின் இரங்கல் அறிக்கையும் இறுதி விடை அளித்தது. கழகத்தினர் அந்த பேரிழப்பை என்றென்றும் நினைவில் கொள்வர்.

...துடிக்கும்

## ஆங்கிலத்தில் ‘கல்லக்குடி போராட்டக் களம்!’




திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில், மிக முக்கிய போராட்டம் மும்முனைப் போராட்டம். ராஜாஜி ஆட்சியில் திணிக்கப்பட்ட குலக்கல்விக்கு எதிர்ப்பு, தமிழ்நாட்டு தலைவர்களை ‘நான்சென்ஸ்’ என்று அவமதித்த பிரதமர் நேருவுக்குக் கண்டனம், டால்மியாபுரம் புகைவண்டி நிலையத்தின் பெயரை மாற்றி, ‘கல்லக்குடி’ எனத் தமிழ்ப் பெயரிட வேண்டும் என்ற கோரிக்கை ஆகிய 3 முக்கிய போராட்டங்கள் இணைந்தது மும்முனைப் போராட்டம். இதில் மூன்றாவது முனையான கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

“மூட்டைப் பூச்சிகளைப் போல முன்னேற்றக் கழகத்தை நசுக்கிவிடுவேன்” என்று அகங்காரத்துடன் பேசிய ராஜாஜி, போராட்ட நெருக்கடியால் முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்யும் நிலைக்கு ஆளானார். பின்னாளில், தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர், கலைஞரே, டால்மியாபுரம் பெயரை கல்லக்குடி என மாற்றி வெற்றியும் கண்டார். அத்தகைய தீரமிக்க போராட்டம் குறித்து கலைஞர் எழுதிய நூல் ‘மும்முனைப் போராட்டம்: கல்லக்குடி களம்’.

தமிழ்நாட்டுக்கு அப்பாலும் அறிந்துகொள்ள வேண்டிய இந்த வரலாற்று ஆவணத்தை ‘The Three Pronged Struggle - The Kallakudi Battle’ என்ற தலைப்பில், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது திராவிடியன் ஸ்டாக் பதிப்பகம். எழுத்தாளர் வானதி மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்ப்பு நூலின் விலை ரூ.80. வாங்கிப் படியுங்கள்... பரப்புங்கள்! நூலைப் பெற: 90927-87854

## ஃப்ளாஷ்பேக்



### சதி வழக்கும் - கை விலங்கும்!



பொள்ளாச்சி உமாபதி

1986-ஆம் ஆண்டு, டிசம்பர் 9, சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தின் போது, கோவை வெடிகுண்டு சதி வழக்கில் கைது செய்யப்பட்டு, சிறையிலிருந்து நீதிமன்றத்துக்குக் கை விலங்கிடப்பட்டு அழைத்து வரும்போது, இந்தித் திணிப்புக்கு எதிராக, காவல் அடக்குமுறைக்கு எதிராக முழக்கமிட்டுக்கொண்டே வந்த காட்சி.

அப்போது, ஒருங்கிணைந்த கோவை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த என்னுடன், மாவட்டத் துணை அமைப்பாளர் தம்புராஜ் ஒரு விலங்கிலும், நவமணி - காட்டூர் ராமமூர்த்தி ஒரு விலங்கிலும், இன்றைய கோவை மாவட்டச் செயலாளர் கார்த்திக் - சிங்கை தங்கவேலு ஒரு விலங்கிலும் பிணைக்கபட்டிருந்தோம். எங்களுக்கு முன்னால், கழக மாவட்ட துணைச் செயலாளர் ரத்னசாமி எங்களைப் பார்க்க வந்திருந்தார். இந்தப் படத்தைப் பார்த்ததும், அடுத்த நாள் ‘உடன் பிறப்பு’ கடிதத்தில் தலைவர் கலைஞர் நெகிழ்ந்து எழுதி இருந்தார்.

**- பொள்ளாச்சி உமாபதி, மாநிலச் செயலாளர், கலை இலக்கிய மற்றும் பகுத்தறிவுப் பேரவை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத் தேர்தல்!

1960-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதி, கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம், சென்னை ராயப்பேட்டை, லாயிட்ஸ் சாலையில் கூடி, கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தது. பொதுச் செயலாளராக பேரறிஞர் அண்ணாவும், அவைத் தலைவராக ஈ.வெ.கி.சம்பத்தும், பொருளாளராக கலைஞரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.